Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆனி மீ 20 ஆம் உ புதன்கிழமை (04 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 10 ஓசை 136

## விமானம் வீசிய பல பொதிகள் கடலில் வீழ்ந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். டச்சுக்கோட்டை முற்றுகையினால் வெளியேற முடியாதிருக்கும் ஸ்ரீ லங்கா சிப்பாய்களுக்கு நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் போர் விமானங்கள் இரண்டு உணவுப் பொதிகளைப் போட்டன. சுமார் ஒருமணிநேரம் கோட்டையைச் சுற்றி வளைந்து உயரப் பறந்த இரு விமானங்களும் 18 பொதிகளைக் கோட்டையை இலக்குவைத்து வீசின. ஆனால் மொத்தம் 18 பொதிகளில் இரண்டு மட்டும்தான் கோட்டைக்குள் வீழ்ந்தன. மிகுதிப் 16 பொதிகளும் பண்ணைக்கடலில் குறி தவறி வீழ்ந்ததாம்.

# தமிழருக்கு உதவுவதாக கூறி உலகை ஏமாற்றுகிறது அரசு!

## கோட்டையிலிருந்து 8 பேரை மீட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முற்றுகையிடப்பட்டுள்ள யாழ். கோட்டை முகாமில் காயமுற்ற பதினேழு படையினரில் எட்டுப் பேரை ஹெலிகொப்டரின் உதவியுடன் மீட்டுவிட்டதாகவும், இரண்டாவது முயற்சி தோல்வி அடைந்து விட்டதாகவும் இலங்கை அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

நேற்று அதிகாலை ஐந்தரை மணியளவில் வேறு சில விமானங்களும், ஹெலிகொப்டர்களும் விடுதலைப்புகளின் நிலைகளின் மீது தாக்குதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதலால் குடிநீர் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

விமானத் தாக்குதலினால் சென்ற வெள்ளிக் கிழமை ஏற்பட்ட பாரிய சேதங்களினால் யாழ்ப்பாண நகரில் குடிநீர் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

திருத்த வேலைகளை மாநகர சபை ஊழியர்கள் மேற்கொண்டிருந்த போதிலும், தொடர்ச்சியாக அப்பகுதியில் இடம்பெறும் ஹெலி, விமானத் தாக்குதல்களினால் துரிதமாக வேலைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கின்றதாம். இருப்பினும் நீர் விநியோகத்தை மீள வழங்குவதற்கு மாநகரசபை தொடர்ந்தும் முயற்சி எடுத்து வருவதாக ஆணையாளர் வெ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## விமானம் நோட்டம்

அதிகாலையில் குண்டுவீச்சு விமானங்கள் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்டதைத் தொடர்ந்து மக்கள் பெரும் பதட்டத்திற்குள்ளானார்கள்.

இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் இரண்டு ஹெலிகொப்டர்களும் அதிகாலை ஐந்து மணியளவில் வட்டமிட்டன இருந்தும் எதுவித தாக்குதல்களும் அப்பகுதியில் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். (லோ

## தமிழர் நிலை பற்றி கலைஞர் மீண்டும் கவலை

(சென்னை)

ஏதுமறியாத அப்பாவித் தமிழ் மக்கள் இலங்கையில் தொடர்ந்தும் கொல்லப்படுவது குறித்து தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற பொதுக் [illegible]

...வித்தார்.

தமிழ் மக்களின் இந்த துன்பங்களுக்கு முடிவு காண்பதற்கும் தீர்வு காண்பதற்கும் மத்திய மாநில அரசுகள் உறுதி கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

தமிழ் மக்களிடையே ஒற்றுமை இல்லாததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக [illegible]

## நேரடியாக உதவி தருமாறு விடுதலைப்புலிகள் கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் இராணுவத்தினாலும், ஆயுதம் தாங்கிய குண்டர்களாலும் இதுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டும் உள்ளனர். இவர்களுக்கு எதுவித உதவியும் வழங்காத சிறிலங்கா அரசு உணவு, மருத்துவ வசதிகளை தமிழ் மக்களுக்குச் செய்வதாக பொய்ப்பிரசாரம் செய்கின்றது என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு;

தமிழீழப் பகுதிகளில் ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினரின் விமானம், ஹெலி, மற்றும் பீரங்கி, ஷெல் தாக்குதல்களினாலும், சிங்களக் குண்டர்களும், இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து தமிழ்பேசும் மக்களுக்குள் புகுந்து மேற்கொண்ட தாக்குதல்களினாலும் இதுவரை 1000இற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டதுடன் வீடுகளை சொத்துக்களை இழந்தும், காயங்களுக்கு உள்ளாகியும், 5இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உண்ண உணவோ, இருக்க இடமோ, மருத்துவ சிகிச்சைக்கு வசதியோ

(4 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். நகரில் நேற்று முன்தினம் வீசப்பட்ட பீப்பாக் குண்டு (வெடிக்காத நிலையில்)

## பலாலியில் மோதல் இரண்டு இராணுவம் பலி

(பலாலி)

பலாலியிலிருந்து வெளியேற முயற்சித்த ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நேற்று நடந்த கடும்மோதலில் சிங்கள இராணுவத்தினர் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுப் பலாலியில் இருந்து வெளியேறும் நோக்கத்தில் ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிச் சூட்டினையும் நடத்தினர்.

ஆனால் விடுதலைப் புலிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்குள் இறங்கி படையினரை மீட்டது பொய்

### காயமுற்றோரை எடுத்துச்செல்ல என்றும் நாம் மறுப்பில்லை-புலிகள் அறிக்கை

## சிலாவத்துறையில் புலிகள் இராணுவம் கடும் சண்டை

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை இராணுவ [illegible] றன.

அதேவேளை [illegible]

ஐந்து மணியளவில் வட்டமிட்டன இருந்தும் எதுவித தாக்குதல்களும் அப்பகுதியில் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். (லோ...

...யோகத்தை மீள வழங்குவதற்கு மாநகரசபை தொடர்ந்தும் முயற்சி எடுத்து வருவதாக ஆணையாளர் வெ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## தமிழர் நிலை பற்றி கலைஞர் மீண்டும் கவலை

(சென்னை)

ஏதுமறியாத அப்பாவித் தமிழ் மக்கள் இலங்கையில் தொடர்ந்தும் கொல்லப்படுவது குறித்து தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இந்த துன்பங்களுக்கு முடிவு காண்பதற்கும் தீர்வு காண்பதற்கும் மத்திய மாநில அரசுகள் உறுதி கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

தமிழ் மக்களிடையே ஒற்றுமையில்லாததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் கருணாநிதி குறிப்பிட்டார்.

## பொருட்களை எடுத்துவர இராணுவம் அனுமதி மறுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கச்சேரி, பிரதேசசபை, மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களில் உள்ள பல இலட்சரூபா பெறுமதி வாய்ந்த பொருட்களை வெளியே எடுக்க இராணுவத்திடம் அனுமதி கேட்கப்பட்டபோதும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரினால் கிளிநொச்சி இராணுவ அதிகாரியிடம் மேற்படி அரச நிறுவனங்களின் சார்பில் உத்தியோக பூர்வரீதியாக அனுமதி கோரப்பட்டது.

இது தவிர உணவுக் களஞ்சியத்திலுள்ள உணவுப் பொரு

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி முரசுமோட்டைக்கு மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை முரசுமோட்டை மிசன் வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் எஸ். குணரத்தினம் மட்டுமே தற்போது இவ் வைத்திய சாலையில் இருந்து கடமையாற்றி வருகிறர்.

இவ் வைத்திய சாலையில் போதிய கட்டில் வசதிகள் இல்லாததால் உள்ளக நோயாளர்களை கூடியளவு அனுமதிக்க முடியாதுள்ளது.

தினமும் 200க்கு மேற் பட்ட வெளிநோயாளர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப் படுகிறது.

பாம்புக்கடி, கிருமிநாசினி

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து கேட்க பத்து கொடுத்தவர் நையப் புடைக்கப்பட்டார்

(சாவகச்சேரி)

இராணுவத்தினர் ஒருவர் கப்பத் தொகையாகக் கேட்ட ஐந்து ரூபாவின் அர்த்தம் புரியாமல் பத்துரூபா நோட்டைக் கொடுத்த லொறிச் சாரதி ஒருவர் அந்த இராணுவத்தினரால் நையப் புடைக்கப்பட்டு, சட்டையும் கிழிக்கப்பட்டு பணப் பேர்சையும் பறிகொடுத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மதவாச்சி இராணுவ முகாமில் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை இராணுவ சிப்பாய் ஒருவர் அகதிகள் வந்த லொறி சாரதியை அடித்து தாக்கினார்.

அடித்து முடிந்ததும் றுப்பிய

(4ஆம் பக்கம் பார்க்க)

அவ்வறிக்கையின் முழு விபரமும் வருமாறு;

தமிழீழப் பகுதிகளில் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரின் விமானம், ஹெலி, மற்றும் பீரங்கி, ஷெல் தாக்குதல்களினாலும், சிங்களக் குண்டர்களும், இராணுவத்தினரும் கூட்டாக சேர்ந்து தமிழ்பேசும் மக்களுக்குள் புகுந்து மேற்கொண்ட தாக்குதல்களினாலும் இதுவரை 1000இற்கு மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டதுடன் வீடுகளை சொத்துக்களை இழந்தும், காயங்களுக்கு உள்ளாகியும், 5இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உண்ண உணவோ, இருக்க இடமோ, மருத்துவ சிகிச்சைக்கு வசதியோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்குள் இறங்கி படையினரை மீட்டது பொய்

### காயமுற்றோரை எடுத்துச்செல்ல என்றும் நாம் மறுப்பில்லை-புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கோட்டையில் காயமடைந்த படையினரை அகற்ற நாம் மறுக்கிறோம் என்றும், தமிழ்பேசும் மக்களை தாம் கொல்லவில்லை என்றும், அகதிகளாகச் சென்றுள்ள மக்களுக்குத் தாம் நிவாரணம் வழங்குவதாகவும் பொய்கூறிவரும் சிங்கள அரசு இன்று கோட்டையிலிருந்து காயமடைந்த படையினர் சிலரை வெற்றிகரமாக மீட்டுள்ளதாக மேலும் பொய் கூறியுள்ளது என நேற்று தமிழீழ

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டுக்கு மீண்டும் தமிழ் அகதிகள் அதிகரிப்பு

(சென்னை)

இலங்கையில் தற்போது நிலவும் பதட்ட நிலையைத் தொடர்ந்து தமிழ் நாட்டிற்கு தமிழர்கள் அகதிகளாக செல்கின்றனர்.

நேற்று முன்தினம் 324 அகதிகள் ராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாளாந்தம் சராசரி 40, அல்லது 50 குடும்பங்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாக செல்வதாக கூறப்படுகிறது.

1983ஆம் ஆண்டில் இருந்து தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் அருகாமையில் உள்ள காவல் நிலையங்களில் தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்ற மாநில அர

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஹெலி உணவுபோட முயற்சி

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் (திங்கள்) மாலை கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், ஆயுதங்களை இறக்குவதற்கு வந்த இரண்டு ஹெலிக்கொப்டர் விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் சரமாரியாகச் சுட்டதால் மேற்படி பொருட்களை இறக்கமுடியாது விமானங்கள் சென்றுவிட்டன.

சம்பவதினம் மாலை சுமார் 5·30 மணியிலிருந்து 6·30 மணிவரை ஹெலிகொப்டரிலிருந்து சரமாரியாகக் குண்டுகள் பொழியப்பட்டன. அதேவேளை விடுதலைப் புலிகளும் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களையும், ஷெல்லடிகளையும் மேற்கொண்டனர்.

இதனால் பொதுமக்கள் பெரும் பீதியடைந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். சேதவிபரம் எதுவும் தெரியவில்லை. (47)

## பலாலியில் மோதல் இரண்டு இராணுவம் பலி

(பலாலி)

பலாலியிலிருந்து வெளியேற முயற்சித்த ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நேற்று நடந்த கடும்மோதலில் சிங்கள இராணுவத்தினர் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுப் பலாலியில் இருந்து வெளியேறும் நோக்கத்தில் ஸ்ரீலங்காஇராணுவத்தினர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிச் சூட்டினையும் நடத்தினர்.

ஆனால் விடுதலைப் புலிகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறையில் புலிகள் இராணுவம் கடும் சண்டை

மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை இராணுவ முகாமில் இருந்து வெளிவர முயற்சித்த இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளதாகவும் இச்சண்டை தொடர்ந்தும் நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதல் ஒன்றில் இரண்டு இராணுவத்தினர் பலியானதாகவும் நால்வர் காயம் அடைந்ததாகவும் இலங்கை வானொலி அறிவித்தது.

## தர்பலகாமத்தில் கடும்மோதல் பொம்மர் ஹெலி தாக்கு

(தம்பலகாமம்)

தம்பலகாமம்நோக்கி பதின் மூன்றாம் கட்டை, சிவப்புப் பாலம், மானாறு ஆகிய பகுதிகளில் இருந்து வந்த ஸ்ரீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை

(4ஆம் பக்கம் பார்க்க)

## "மங்களா" மரணம்

(வவுனியா)

வவுனியாவில் கடும் சுகவீனம் காரணமாக விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் காலமானார். தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா உறுப்பினரான மங்களா என்பவர் இவருக்கேற்பட்ட கடும் சுகவீனம் காரணமாக கடந்த 28 ஆம் திகதி இரவு காலமானார். (ம)

## வைத்தியசாலை பதுங்கு குழிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வைத்தியசாலையில் பதுங்குகுழிகளை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தங்கம் தருகிறார்கள்; தரத்திற்கேற்ப பணமும் தருகிறார்கள் விடுதலைக்கு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தாங்கள் அறிமுகப்படுத்தும் தாயகம் மீட்புக்கான கடன் பத்திரம் அறிமுகப்படுத்தும் வைபவம் நேற்று ஆரம்பித்து வைக்கப் பெற்றது.

கோப்பாய், நல்லூர், மானிப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப் பெற்ற இவ் வைபவங்களில் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் தமது பங்களிப்புக்களை செலுத்தினர். பலர் தாங்களாகவே முன்வந்து பத்திரங்களைப் பூர்த்தி செய்து கணிசமான தங்கத்தைக் கடனாக கொடுத்து தாயக மீட்பு நிதி திட்டத்தின் பங்காளிகளாக ஆகியதைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்தியசுதந்திரப் போராட்டக் காலத்தில் காந்தி மகாத்மா நிதிகோரிச்சென்ற போது தாலியைமட்டும் கழற்றிக்கொண்டு கொடியைக் கொடுத்தவர்களும் கழுத்திலும் கைகளிலிருந்தும் நகைகளைக் கழற்றிக்கொடுத்தவர்களைப்போல நேற்றும் மக்கள் தங்கள் நகைகளைக் கழற்றிக் கொடுத்துதவிய காட்சியைக் காணக்கூடியதாக இருந்தது.

(4ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு 1890-1990

வரிவிளம்பரம்

### காணவில்லை

து. அண்ணுத்தாய், பிறிஸ்கா ஆகிய இருவரையும் 28-6-90 அன்றிலிருந்து காணவில்லை. கண்டவர்கள் தயது செய்து கீழுள்ள விலாசத்திற்கு அறியத்தரவும். S. புலேந்திரன், 15/6 நியூ கொலனி, திருநெல்வேலி, கோப்பாய். தகவல்:- ராஜா ஸ்ரோர்ஸ், வவுனியா.

(R/392)


காலிறுதி ஆட்டங்களில்

இத்தாலியா - 90

# முதலாம்தர அணிகளை திணறடித்த இரண்டாம் தர அணிகள்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இறுதிக் கட்டத்தை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. இரண்டாம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பதினாறு அணிகள் நொக்அவுட் முறையின் மூலம் எட்டு அணிகளாகக் குறைந்து கால் இறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றன. ஆர்ஜென்ரீனா, யூகோஸ்லாவியா, அயர்லாந்து இத்தாலி, செக்கோஸ்லோவாக்கியா, மேற்கு ஜேர்மனி, கமரூன், இங்கிலாந்து ஆகியனவே அவை. இவை தெரிவு முறைப்படி ஒன்றையொன்று சந்தித்து தற்போது அரை இறுதி ஆட்டத்துக்கு நான்கு நாடுகள் தகுதி பெற்றுள்ளன. இத்தாலி, ஆர்ஜென்ரீனா, மேற்குஜேர்மனி, இங்கிலாந்து ஆகியனவே அவை. தற்போதைய நிலைவரத்தின்படி இறுதிக் கட்டத்தை நோக்கி வழக்கமாக நடைபெறுவது போலவே ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க நாடுகளே தெரிவு செய்யப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. கால் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்ற இரண்டு கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஒரேயொரு ஆபிரிக்க நாடும் இதற்கப்பால் செல்ல இயலவில்லை.

கடந்த சனிக்கிழமை கால் இறுதி ஆட்டத்தின் முதல் இரண்டு ஆட்டங்கள் இடம் பெற்றன. இதில் முதலாவது ஆட்டம் ஆர்ஜென்ரீனாவுக்கும், யூகோஸ்லாவியாவுக்கும் இடையில் நடைபெற்றது. ஆர்ஜென்ரீனா தற்போதைய உலகச் சம்பியன்.

யூகோஸ்லாவியா இரண்டாம் சுற்றில் பலம்வாய்ந்த ஸ்பானிய அணியை வென்ற அணி. இந்தவகையில் தகுதியான இரு அணிகள் மோதிக் கொண்டனவென்றே கூறவேண்டும். போட்டியின் போக்கும் அதனையே காட்டியது. குறித்த தொண்ணூறு நிமிடவேளையிலும் இரு அணிகளும் கோல்போட அனுமதிக்கவில்லை. மேலதிக முப்பது நிமிடநேரமும் அவ்வாறே முடிந்தது. இறுதியில் பெனால்ட்டிகிக் மூலம் ஆட்டம் முடிவு காணப்பட்டது. 3-2 என்ற வகையில் ஆர்ஜென்ரீனா வெற்றிகண்டது. உண்மையில் ஆரம்பத்தில் இருந்தே ஆர்ஜென்ரீனா தன் முழுவலுவையும் காட்ட இயலாதபடி யூகோஸ்லாவியா செய்துவிட்டது. குறிப்பாக ஸ்பாசிக் அற்புதமாக விளையாடி ஆர்ஜென்ரீனாவை கோல்போடவிடாதபடி தடுத்துக் கொண்டேயிருந்தார். இதேவேளை மரடோனாவை கட்டுப்படுத்துவதற்கென்றே செயற்பட்ட செரனாவோஷச் ஆட்டந்தான் முப்பதாவது நிமிடத்தை அண்டி களத்தில் இருந்து மத்தியஸ்தரால்வெளியேற்றப்பட்டார். எனவே விளையாட்டின் இறுதிதொண்ணூறு நிமிடத்தையும் பத்துப் பேருடன் யூகோஸ்லாவியா சமாளித்ததை குறிப்பிட வேண்டும்.

**மரடோனாவின் துரதிஸ்டம்**

இதே வேளை மரடோனாவை மாறி மாறி எதிர்த்தரப்பு வீரர்கள் கண்காணித்துக் கொண்டே இருந்ததால் அவரால் எதுவும் செய்து கொள்ள இயலவில்லை. இது ஒரு துரதிஸ்டமாகும். இச்சுற்றுப் போட்டியின்

## நிர்மலன்

ஆரம்பத்தில் இருந்தே மரடோனாவை எதிர் அணிகள் விளையாட விடவேயில்லை. இதனால் மரடோனா இன்னும் ஒரு கோல் கூடப்போட இயலவில்லை. விளையாட அனுமதிக்காமைக்கான காரணம் சரியாக இருக்கலாம். எனினும் ஒரு அற்புதமான வீரனின் பூரணத்துவ செயற்பாட்டை ரசிகர்கள் கண்டு களிக்கும் சந்தர்ப்பம் இழக்கப்படுகிறதென்பதும் உண்மை. இச்சுற்றுப் போட்டியில் கூடுதலான பவுல்கள் மரடோனாவிற்கு எதிராகவே போடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கூடுதலான - ஐந்து- ஆட்டக்காரர்கள் களத்தை விட்டு வெளியேற்றப்பட்டதும் ஆர்ஜென்ரீனா அணியுடனான போட்டிகளிலாகும்.

ஆர்ஜென்ரீனா யூகோஸ்லாவியாவை நேரடியாக வெற்றிகொள்ள சகல வித பிரயத்தனங்களையும் எடுத்தது. ருகேரி, புருச்சாகா, ரொக்லியோ போன்றோர் அற்புதமாகஆடினார்கள். புருச்சாகா ஒரு கோலையும் போட்டார். ஆனால் அந்த கோல் மத்தியஸ்தரால் ஏற்கப்படவில்லை. இதன் பின்னரே பெனால்ட்டி முறையில் முடிவு தீர்மானிக்கப்பட வேண்டியதாயிற்று.

**தோல்வியிலும் கௌரவம்**

இன்னொரு ஆட்டத்தில் இத்தாலியும் அயர்லாந்தும் மோதிக் கொண்டன. இத்தாலி இம்முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் என்று எல்லோராலும்எதிர்பார்க்கப்படும் ஒரு அணியாகும். அயர்லாந்து இரண்டாம் தரத்திற்கணிக்கப்பட்ட அணி. எனவே இத்தாலியின் வெற்றியில் யாருக்கும் சந்தேகம் இருக்கவில்லையென்றாலும் அயர்லாந்து எப்படித் தோற்கும் என்பதில் ஒரு எதிர்பார்க்கை இருந்தது. ஒன்றுக்குப் பூஜ்யம் என்ற வித்தியாசத்தில் அயர்லாந்து தோற்றுவிட்டதெனினும் விமர்சகர்கள் கோணத்தில் மிக்க மதிப்பானதொரு தோல்வியாக அது கணிக்கப்படுகின்றது. ஒரு விமர்சகர் கூறுகையில் ''அவர்கள் ஆட்டத்தில் தோற்றுவிட்டாலும் எம்மனங்களில் நிறைந்து விட்டார்கள்'' என்கிறார். இதற்கான காரணங்கள் இரண்டு. முதலாவது இத்தாலிச்கெதிராக அவர்கள் தங்கள் முழுச்சக்தியையும் பயன்படுத்தி இத்தாலியைத் திக்குமுக்காட வைத்தது. அடுத்தது அவர்கள் ஆட்டத்தின் போதும் தோல்வி கண்ட பின்னும் நடந்து கொண்ட முறை இத்தாலிய வீரர்களை மனம் திறந்து பாராட்ட எந்த அயர்லாந்து வீரனும் தயங்கவில்லை.


**இத்தாலிய நட்சத்திரங்கள்**

இதே வேளை இத்தாலி கிலாச்சி என்ற பெயரில் 37 வயதுடைய அபாரமான விளையாட்டுவீரனைப்பெற்றிருக்கிறது. மிகமிக அபாரமாக ஆடி போடப்பட்ட ஒரே ஒரு கோலை இவரே இத்தாலிக்குப் பெற்றுக் கொடுத்தார். முன்னணி வீரரான இவரைக் கட்டுப்படுத்துவது ஆட்டத்தில் எதிரணியினருக்கு பெரும் கவலை தரும் விடயமாக இருக்கப்போகிறது. அடுத்து இத்தாலிய கோல்காப்பு வீரர் செங்காபதட்டமடையாதவர். மனம் தளராதவர். மின்னல் வேகச் செயற்பாடு கொண்டவர். இவரது திறமையை இச்சுற்றுப் போட்டிக்கான இத்தாலிக்கு எதிராக இன்னமும் ஒரு கோல் கூடப் போடவில்லை என்பதில் இருந்து தீர்மானித்துக் கொள்ளலாம். அயர்லாந்துக்கெதிராக போட்டியில் நிச்சயமாக மூன்று கோல்களை செங்கா தடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

(3 ஆம் பக்கம் பார்க்க)


## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்

(4 - 07 - 90)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 21 |
| 07 | 05 |
| 1965 | 1990 |

### செல்வன் அ. விக்கினேஸ்வரன்

(வவி)

அன்புத் தெய்வமே! எம் உயிருக்கு உயிரான தெய்வமே!

நாற்பத்தைந்து நாட்கள் சென்றதுவே! எம் இல்லமெல்லாம் இருண்டதுவே! உன்மேல் பாசமாய் இருந்த எம்மை எல்லாம் பரிதவிக்கவிட்டு நீர் விண்ணுலகம் சென்றீரோ? பாரினிலே பாவிகள் எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டீரே!

நாற்பத்தைந்து நாட்கள் அல்ல; நாற்பத்தைந்து ஆண்டுகள் அல்ல; எம் உயிர் உள்ளவரை உன் நினைவு எம்மைவிட்டு அழியாது!

இருபத்தைந்து ஆண்டுகள் எம் குடும்பத்தில் மெழுகுவர்த்தியாய் இருந்து எமக்கு ஒளி தந்தீரோ! இப்போ எம்மைவிட்டுப் பிரிந்து சென்றீரோ! உமது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்

கேணிக்குள ஒழுங்கை,<br>
இருபாலை கிழக்கு,<br>
கோப்பாய்.

நித்தம் உம் பிரிவால் வாடும்<br>
அப்பா, அம்மா,<br>
அண்ணன், தம்பிமார்கள்.

(B/1215)



## நியு விமாகி செரிமிக்ஸ்


தற்பொழுதுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக எமது ஸ்தாபனம் மானிப்பாயில் இலங்கை வங்கிக்கிளைக்கு முன்பாகஇடம்மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

செரிமிக்ஸ்உற்பத்திப்பொருட்களும்மாபிள் கற்கள் போன்றவற்றையும்மொத்தமாகவும்சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

(B/ 1222)



## முதலாம் ஆண்டு நினைவுதினம்



| அன்னை மடியில் | அமலன் அடியில் |
|---|---|
| 07-06-1969 | 15-07-1989 |

யாழ். நாயன்மார்கட்டு

### இரகுநாதன் சிவபரன்

திதி: 04-07-1990 புதன்கிழமை

எந்தையொடு தாய்மகிழ்ந்து வாழ்ந்த இந்த<br>
ஈழத்தை அந்நியர்கள் அடக்கியாளல்<br>
விந்தையிந்த நிலைமாற வேண்டும் என்று<br>
வேங்கையென வீறுடனே களத்திற் சென்று<br>
பந்தமுறப் பொய்யுடலைப் போக்கி மேலாம்<br>
பாங்குடைய புகழுடலை நிறுத்திச் சென்றான்<br>
செந்தமிழன் சிவபரனை நினைக்கும் இந்நாள்<br>
சிந்தையிலே வீறுகொளும் சிறந்த நாளே.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாயன்மார்கட்டு,<br>
யாழ்ப்பாணம்.

(R.396)

குடும்பத்தினர்களும்<br>
நண்பர்களும்



ஆடவர் மனம் நாடும் அழகான 'சேட்டிங்' துணிவகைகள்

ஆண்டுகள் அல்ல; எம் உயிர் உள்ளவரை உன் நினைவு எம்மைவிட்டு அழியாது!

இருபத்தைந்து ஆண்டுகள் எம் குடும்பத்தில் மெழுகு வர்த்தியாய் இருந்து எமக்கு ஒளி தந்தீரோ! இப்போ எம்மைவிட்டுப் பிரிந்து சென்றீரோ! உமது ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக் கிறோம்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இங்ஙனம்

கேணிக்குள ஒழுங்கை,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

நித்தம் உம் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணன், தம்பிமார்கள்.

(B/1215)

ஆர்ஜென்டீனா தற்போதைய உலகச் சம்பியன்.

யூகோஸ்லாவியா இரண் டாம் சுற்றில் பலம்வாய்ந்த ஸ்பானிய அணியை வென்ற அணி. இந்தவகையில் தகுதியான இரு அணிகள் மோதிக் கொண்டனவென்றே கூறவேண்டும். போட்டியின் போக்கும் அதனையே காட்டி யது. குறித்த தொண்ணூறு நிமிடவேளையிலும் இரு அணி களும் கோல்போட அனும திக்கவில்லை. மேலதிக முப்பது நிமிடநேரமும் அவ்வாறே

ஆரம்பத்தில் இருந்தே மர டோனாவை எதிர் அணிகள் விளையாட விடவேயில்லை. இதனால் மரடோனா இன் னும் ஒரு கோல் கூடப்போட இயலவில்லை. விளையாட அனுமதிக்காமைக்கான கார ணம் சரியாக இருக்கலாம். எனினும் ஒரு அற்புதமான வீரனின் பூரணத்துவ செயற் பாட்டை ரசிகர்கள் கண்டு களிக்கும் சந்தர்ப்பம் இழக்கப் படுகிறதென்பதும் உண்மை. இச்சுற்றுப் போட்டியில் கூடு தலான பவுல்கள் மரடோனா

''அவர்கள் ஆட்டத்தில் தோற்றுவிட்டாலும் எம்மனங் களில் நிறைந்து விட்டார் கள்'' என்கிறார். இதற்கான காரணங்கள் இரண்டு. முத லாவது இத்தாலிக்கெதிராக அவர்கள் தங்கள் முழுச்சக்தி யையும் பயன்படுத்தி இத்தாலியைத் திக்குமுக்காட வைத்தது. அடுத்தது அவர் கள் ஆட்டத்தின் போதும் தோல்வி கண்ட பின்னும் நடந்து கொண்ட முறை இத்தாலிய வீரர்களை மனம் திறந்து பாராட்ட எந்த

இரகுநாதன் சிவபரன்

திதி: 04-07-1990 புதன்கிழமை

எந்தையொடு தாய்மகிழ்ந்து வாழ்ந்த இந்த
ஈழத்தை அந்நியர்கள் அடக்கியாளல்
விந்தையிந்த நிலைமாற வேண்டும் என்று
வேங்கையென வீறுடனே களத்திற் சென்று
பந்தமுறப் பொய்யுடலைப் போக்கி மேலாம்
பாங்குடைய புகழுடலை நிறுத்திச் சென்றான்
செந்தமிழன் சிவபரனை நினைக்கும் இந்நாள்
சிந்தையிலே வீறுகொளும் சிறந்த நாளே.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(R.396)

குடும்பத்தினர்களும்
நண்பர்களும்


* ஆடவர் மனம் நாடும் அழகான 'சேட்டிங்' துணிவகைகள்
* தரமான 'வெள்ளை பொலியஸ்டர்' துணி வகைகள்
* பொலியஸ்டர் - பிஜாமா - சாரங்கள்

ஆகியவற்றை யாழ்நகரில்
உற்பத்தி செய்வதில்
புகழ் பெற்றவர்கள்

ஸ்ரீ ரம்யா இன்டஸ்ரீஸ்

SRI RAMYAH

SHREE RAMYAH INDUSTRIES

இணுவில்.

(B-1214)

## சிந்தனைக்கு

எந்த இலட்சியத்திற்காக உயிர் துறக்கப்படுகிறதோ, அதுவே ஒருவரைத் தியாகியாகச் செய்யும். வெறும் மரணம் மட்டும் ஒருவரைத் தியாகியாக்கி விடாது.

- நெப்போலியன் பொனெபார்ட்


ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 04-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# தமிழரை அழிப்பதில் அவர்கள் ஒற்றுமை!

வடக்கு கிழக்குப் பகுதியில் இப்போதுள்ள நிலைபற்றி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சியினருக்கு சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா விளக்கிக் கூறியிருக்கிறார்.

பிரேமதாசாகூட்டிய இந்தக்கூட்டத்தில் சிறிலங்காவின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் கலந்துகொண்டு வடக்குக் கிழக்கு நிலைபற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்.

இப்படி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது. வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இச் செய்தியை வெளியிட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளும் பிரதிநிதிகளும் மிகப்பெரும்பாலானவர்கள் சிங்களவர்களே.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து ஆட்சிபீடத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளன.

1948 ஆம் ஆண்டில் சிங்களவர்களுடன் தமிழரும் முஸ்லிம்களும் சேர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தது. 1956 ஆம் ஆண்டில் களனி மாநாட்டில் சிங்களம் மட்டுமே நாட்டின் உத்தியோக மொழி என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம் நிறைவேற்றியதும் ஐக்கியமும் தேசியமும் முடிந்துவிட்டன என்று கூறி சு. நடேசபிள்ளை வெளியேறியதுடன் தமிழர்கள் அதிலிருந்து விலகிக் கொண்டனர்.

1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களின் மொழி உரிமை முதல் சகல உரிமைகளையும் பறிக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போட்டு வந்தன.

இந்தக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சிக்கு வந்த இடதுசாரிகள்கூட வகுப்புத் துவேஷத்தைக் கைக்கொண்டனர்.

இடதுசாரிகளானாலென்ன வலதுசாரிகளானாலென்ன இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பே தலையெடுக்கத் தொடங்கியிருந்தது.

தமிழ் மக்களுக்கு இலங்கையில் பாரம்பரிய பிரதேசம் என ஒன்று இல்லை என்பதை நிரூபிப்பதற்கு சிங்கள பௌத்த பேரினவாதம் திட்டமிட்டுச் செயலாற்றி வந்திருக்கிறது. அதாவது தமிழ் மக்களுக்குத் தாயகம் என இலங்கையில் எதுவுமில்லை என்பதை நிரூபிக்க

## ஸ்ரீ லங்கா அரசினால்

# தொடுக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை

# தகர்த்தெறிவதும் நமது கடமை!

பேரினவாத சிறிலங்கா அரசினால் தமிழீழ மக்கள் மீது இருமுனை தாக்குதல்கள் மிகவும் கொடூரமான முறையில் தொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது ஆயுத ரீதியான தாக்குதல், மற்றையது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான பொருளாதாரத் தடை. இவைகளிரண்டுமே சிறிலங்கா அரசின் இருமுனைத் தாக்குதல்களாகும்.

### தொடர்புகள் துண்டிப்பு

தமிழீழ மக்கள் மீது போர் பிரகடனப்படுத்தப்பட்டு இருபது நாட்களுக்கு மேலாகிவிட்டது. கொழும்புடனான சகல விதமான தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ளது. எவ்வித உணவுப் பொருட்களும்தென்னிலங்கையிலிருந்து வரமுடியாது தடுக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் தனியார்துறையினரிடம் இருந்த அரிசி, மா, சீனி உட்பட பல அத்தியாவசியமான பொருட்கள்யாவும் முடிவுள்ள நிலையில் உளள போதும், அவைகளை மீண்டும் கொண்டு வரமுடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

### ஆயுதப் போராட்டம் மாத்திரம் அல்ல

இதேவேளை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களின் களஞ்சியங்களும் கூட வரண்டுபோகும் நிலையை நோக்கிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அத்தியா அவசிய உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த அரச அதிபர்களும், உயர் அதிகாரிகளும் சிறிலங்கா அரசுடன் தொடர்பு கொண்ட போதும் அதற்கு நம்பிக்கையூட்டக்கூடிய நடவடிக்கையோ, பதிலோ ஏற்படுவதாக தெரியவில்லை. இவைகளின் மூலம் சிறிலங்கா அரசு இன்று தமிழீழ மக்கள் மீது தொடுத்திருப்பது வெறுமனே ஆயுதப் பிரகடனம் மாத்திரம் அல்ல. மாறாக பொருளாதார பிரகடனமும் ஆகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

இன்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ள இந்த யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மாத்திரமே அன்றி, தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல என்று சிறிலங்கா அரசு பறைசாற்றுகின்றது. இந்தக் கூற்று உண்மையெனில் நிராயுதபாணிகளான மக்கள் மீது ஏன் தாக்குதல் தொடுக்கப்படல் வேண்டும்?

## மாத்தளையான்

நிராயுதபாணிகளான மக்கள் மீது பொருளாதாரத் தடையினை ஏன் கொண்டு வர வேண்டும்? என்பது குறித்து தமிழ் மக்கள் அனைவரும் நன்குணர வேண்டும்.

### அடக்குமுறையின் ஒரு வடிவம்

அடக்கும் தேசம் அடக்கப்படும் தேசத்தின் மீது; அடக்கும் நாடு அடக்கப்படும் நாட்டின் மீது; அடக்கும் இனம் அடக்கப்படும் இனத்தின் மீது தனது தாக்குதல் நடவடிக்கைகளை பல வடிவங்களில் கொண்டு வருவதுண்டு. அவ்வாறான வடிவங்களில் ஒன்றுதான் இந்த பொருளாதார ரீதியான தடையுமாகும்.

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த இருமுனைத் தாக்குதல்களைக் கண்டு தமிழீழ மக்களாகிய நாம் ஒப்பாரி வைத்தோ, ஓலமிட்டோ அழுவதின் மூலம் முறியடித்துவிட முடியாது. மாறாக இந்த தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து எதிர் யுத்தத்தை மூர்க்கமுடன் கொண்டு நடத்துவதன் மூலமே முறியடிக்க முடியும் என்பதுதான் போராட்ட நியதியாகும்.

### போராட்ட வடிவங்கள்

எதிரி எம்மை அடக்குவதற்காக எப்படி பல வடிவங்களை கையாளுகின்றானோ; அந்த எதிரியை முறியடிக்க நாமும் பல போராட்ட வடிவங்களை கையாளுதல் அவசியமாகும். சிறிலங்கா அரசின் ஆயுத போராட்டத்திற்கு எதிராக எவ்வாறு ஒரு எதிர் யுத்தத்தைத் தொடுத்துள்ளோமோ; அதனைப்போன்று எம்மீது தொடுக்கப்பட்டுள்ள பொருளாதார யுத்தத்திற்கு எதிராகவும் எதிர் யுத்தம் நடத்தப்படல் நமது கடமையாகும். சிறிலங்கா அரசு எம்மீது தொடுத்துள்ள பொருளாதாரத் தடை என்ற நிலைமை மாற்றமடைந்து, சிறிலங்கா அரசின் அனைத்துப் பொருட்களும் எமக்கு வேண்டாம் என்று பகிஷ்கரிக்கும் ஒரு நிலைமையை உருவாக்க நாம் முன்வருதல் இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமான தொரு போராட்டக்கால நடவடிக்கையாகும்.

> அடக்கும் இனம், அடக்கப்படும் இனத்தின் மீது தனது தாக்குதல் நடவடிக்கைகளை பல வடிவங்களில் கொண்டு வருவதுண்டு. அவ்வாறான வடிவங்களில் ஒன்றுதான் இந்த பொருளாதார ரீதியான தடையுமாகும்.

மேலும் இதனை நாம் விளங்கிக் கொள்வதெனில் தமிழீழ மண்ணில் பாவனையிலுள்ள சிகரெட் முதல் சாராயம் வரையிலான சகல பொருட்களும் சிறிலங்கா அரசின் வரி அறவிடலின் ஊடாகவே விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறு அறவிடப்படும் இந்த வரி எம்மை அழிப்பதற்கான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இதனில் நாம் தெளிவுபடவில்லையெனில் எம்மை அழிப்பதற்கான சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு நாமே மறைமுகமாக உதவுகின்றோம் என்பதே உண்மையாகும்,

### பொருளாதாரத் தடையை எப்படி நாம் முறியடிப்பது?

சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இந்த பொருளாதாரத் தடையை எப்படி நாம் முறியடிப்பது என்பது குறித்து சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு ஏறக்குறைய 25 வருடங்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சீனாவின் பொருளாதார உற்பத்தி முறைகள் நமது கவனத்துக்கு உரியதாக அமைகின்றது.

### சீனாவின் போராட்டக்கால பொருளாதார அமைப்பு

அந்த சீன நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமமும் வெவ்வேறு தனித்தனி கம்யூன்களாக இயங்கின. இந்த கம்யூன்கள் ஆயுத நடவடிக்கைகளில் மாத்திரமன்றி உணவு உற்பத்தித் துறையிலும் தன்னைத்தானே கட்டி எழுப்பியதுடன் சுயதேவையினை பூர்த்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சி கண்டிருந்தன. இந்த வளர்ச்சியின் நிமித்தம் போராட்டக் காலத்தில் ஒரு கம்யூன் இன்னுமொரு கம்யூனுக்கு இடம் பெயரும் பொழுது அந்தக் கம்யூனுக்கு இது ஒரு பளுவாக அமையவில்லை. மேலும் போராளிகள் தமது உணவுத் தேவைக்காக அலைந்து திரியும் நிலை ஏற்படாது; தொடர்ச்சியான யுத்தத்தை மேற்கொள்ள ஏதுவானதுடன், உணவுக்காக எதிரியை நம்பியிருக்கும் நிலைமையும் அங்கு இல்லாமல் போய் இருந்தது.

இதற்கொப்ப தமிழீழ மண்ணிலும் கூட எம்மை நோக்கி போர் பிரகடனத்தையும், பொருளாதாரத் தடை பிரகடனத்தையும் அமுல் நடத்தியுள்ள பேரினவாத சிறிலங்கா அரசிடம் உணவுக்கு தெண்டனிடாது சுய உணவு உற்பத்தியை உருவாக்குதல் அவசியமாகும்.

### சுய உற்பத்தியும் தன்னிறைவும்

பரந்த நிலப்பரப்பு எம் மண்ணில். உண்டு இதில் எம்மவர்கள் புகையிலை, வெங்காயம் போன்ற பணப்பயிர்களையே உற்பத்தி செய்து வருகின்றார்கள். இந்த பணப்பயிர் உற்பத்தி நிலைமை மாற்றப்பட்டு அன்றாட தேவைக்கான உணவுப் பொருட்களான கிழங்கு, கௌபி, உழுந்து உட்பட பலவாறானவற்றுக்கு முக்கியத்துவம் கொண்டுஉற்பத்தி செய்தல் முக்கியமானதாகும்.

இதனைப் போன்றே எம் மண்ணில் மேற்கொள்ளப்படும் கள்ளிறக்கும் தொழிலின் மூலம் பனம் கள்ளு, தென்னங்கள்ளு என்பன பெருமளவில் பெறப்படுகின்றன. இப்பதநீர்யாவும் கள்ளாகவும், மதுசாரமாகவும் நுகரல் படுத்தப்படுகின்றது. இந்த நிலைமையை மாற்றி பனை, தென்னங்கள்ளை கருப்பட்டியாக உற்பத்தி செய்யப்படும் பட்சத்தில் சிறிலங்காவின் சீனியை முற்றாக நாமே தடை செய்யலாம்.

இவ்வாறே எம்மண்ணில் உள்ள சகல விதமான மூலப் பொருட்களையும் சரியான முறையில் ஆய்வு செய்து நாம் எமது இன்றைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக மாற்றி அமைத்தல் பிரதானமானதாகும் இது விடயத்தில் சரியான முறையில் ஆய்வினை மேற்கொள்வதும்; கிராம மட்டத்திலான எமது உணவின் சுய தேவைகளை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்து கொள்வதும் இன்றைய பேரினவாத சிறிலங்கா அரசுக்கு எதிரான யுத்தத்தில் நாம் கையாளும் வடிவங்களில் ஒன்றாகவே அமையும்.

முதலாம் தர

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றச்சாட்டை விமர்சகர்கள்எழுப்புகிறார்கள். அவர்கள் மே. ஜேர்மனியின் வெற்றியை

கொண்டனர்.

1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழர்களின் மொழி உரிமை முதல் சகல உரிமைகளையும் பறிக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போட்டு வந்தன.

இந்தக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சிக்கு வந்த இடதுசாரிகள்கூட வகுப்புத் துவேஷத்தைக் கைக்கொண்டனர்.

இடதுசாரிகளானாலென்ன வலதுசாரிகளானாலென்ன இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பே தலையெடுக்கத் தொடங்கியிருந்தது.

தமிழ் மக்களுக்கு இலங்கையில் பாரம்பரிய பிரதேசம் என ஒன்று இல்லை என்பதை நிரூபிப்பதற்கு சிங்கள பௌத்த பேரினவாதம் திட்டமிட்டுச் செயலாற்றி வந்திருக்கிறது. அதாவது தமிழ் மக்களுக்குத் தாயகம் என இலங்கையில் எதுவுமில்லை என்பதை நிரூபிக்க பல வழிமுறைகளையும் சிங்களத் தலைவர்கள் கையாண்டு வந்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் திருக்கோணமலையிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பாறை, இங்கினியாகலவரை திட்டமிட்டகுடியேற்றங்கள்மூலம் தமிழ்மண் அபகரிக்கப்பட்டு அவற்றுக்குப் புதிய சிங்களப் பெயர்கள் இடப்பட்டு அப்பகுதிகள் யாவும் இன்று சிங்களக் கிராமங்களாக இருக்கின்றன.

மலையகத் தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட சமயத்திலும் சரி, தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம் அபகரிக்கப்பட்டு சிங்களமயமாக்கப்படுவதிலும்சரி, தமிழ் மக்களின் மொழி மற்றும் உரிமைகள் பறிக்கப்படுவதிலும் சரி, ஏன் தமிழ்மக்களுக்கு எதிராக இனத்துவேஷத்தைக் கிளப்ப தமிழர்களின் உயிரையும் உடமைகளையும் பறித்து அநாதைகளாய் அகதிகளாய் அவர்களை வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு கப்பல்களிலும் இன்று லொறிகள் பஸ்களிலும் அனுப்பிவைப்பதிலும்சரி சிங்களத் தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மிகுந்த ஒற்றுமையே நிலவி வந்திருக்கிறது. இன்றும் நிலவிவருகிறது. இதில் அவர்களுக்கிடையில் கருத்து வேற்றுமைக்கு இடமேயில்லை.

அதாவது தமிழ்மக்களின் மண்ணையும் அவர்களின் உரிமைகளையும் பறித்து அவர்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக வைத்திருக்க வேண்டுமென்பதில் சிங்களத் தலைவர்களுக்கிடையில் மிகுந்த ஒற்றுமை என்றும் உண்டு!

நாற்பதாண்டு காலம் அடக்குமுறைகளை அனுபவித்த தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக நடத்திய அகிம்சைப் போராட்டமெல்லாம் தோல்வியில் முடிந்தபின் இன்று தமது சுதந்திரத்துக்காக ஆயுதம் ஏந்தி அடக்குமுறைக்கு எதிராக வீரப் போர் புரிந்துகொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில்தான் சிங்கள அரசியல் கட்சிகள் தமிழ்மக்களுக்கு எதிராக ஒன்றுகூடி நிலைமையை ஆராய்கின்றனர்.

'சார்க்' நாடுகளுக்கும் சர்வகட்சித் தூதுக்குழு ஒன்றை சிறிலங்கா அரசு அனுப்பி ஆதரவு திரட்டப் போகிறதாம்!

தமிழ் மக்களின் உரிமைக்குரலை அடக்கி எதிர்ப் பிரசாரம் செய்வதற்கு கடந்த காலங்களில் ஒவ்வொரு அரசாங்கத்திலும் சில தமிழர்கள் காட்சிப் பொருள்களாய் இருந்து வந்துள்ளனர்.

1972 ஆம் ஆண்டு சிறிமா அம்மையாரின் ஐக்கிய முன்னணி கொண்டுவந்து நிறைவேற்றிய அரசியல் அமைப்பிலும் இரு தமிழ்ப் பிரதிநிதிகள் கைச்சாத்திட்டு இருந்தனர்.

இன்றும் பிரேமதாசா கூட்டிய அரசியல் கட்சிகளின் கூட்டத்திலும் ''தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழையானால் போதும்'' என்ற தமிழ்ச் சமுதாயத்தின் புல்லுருவிகள் கலந்துகொண்டு ''தலையாட்டி''களாக இருந்திருக்கின்றனர்.

தமிழ் மக்களை அழிக்க சிங்கள அரசியல்வாதிகள் ஒன்றுசேர்கின்றனர். எங்களை அழிக்க இவர்களும் அவர்களுடன் கூட்டுச் சேர்கின்றனர்.

இவர்களும் தமிழர்கள் தானா?

---

நோக்கிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த அத்தியா அவசிய உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த அரச அதிபர்களும், உயர் அதிகாரிகளும் சிறிலங்கா அரசுடன் தொடர்பு கொண்ட போதும் அதற்கு நம்பிக்கை யூட்டக்கூடிய நடவடிக்கையோ, பதிலோ ஏற்படுவதாக தெரியவில்லை. இவைகளின் மூலம் சிறிலங்கா அரசு இன்று தமிழீழ மக்கள் மீது தான் இந்த பொருளாதாரத் ரீதியான தடையுமாகும்.

சிறிலங்கா அரசினால் மேற் கொள்ளப்பட்டுள்ள இந்த இரு முனைத் தாக்குதல்களைக் கண்டு தமிழீழ மக்களாகிய நாம் ஒப்பாரி வைத்தோ, ஓலமிட்டோ அதிலிருந்து மூலம் முறியடிக்க முடியாது. மாறாக இந்த தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து எதிர் யுத்தத்தை மூர்க்கமுடன் கொண்டு நடத்துவதன் மூலமே முறியடிக்க முடியும் என்பதுதான் போராட்ட நியதியாகும்.

மேலும் இதனை நாம் விளங்கிக் கொள்வதெனில் தமிழீழ மண்ணில் பாவனையிலுள்ள சிகரெட் முதல் சாராயம் வரையிலான சகல பொருட்களும் சிறிலங்கா அரசின் வரி அறவிடலின் ஊடாகவே விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறு அறவிடப்படும் இந்த வரி எம்மை அழிப்பதற்கான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. இதனில் நாம் தெளிவு படவில்லையெனில் எம்மை அழிப்பதற்கான சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு

பூர்த்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சி கண்டிருந்தன. இந்த வளர்ச்சியின் நிமித்தம் போராட்டக் காலத்தில் ஒரு கம்யூன் இன்னுமொரு கம்யூனுக்கு இடம் பெயரும் பொழுது அந்தக் கம்யூனுக்கு இது ஒரு பளுவாக அமையவில்லை. மேலும் போராளிகள் தமது உணவுத் தேவைக்காக அலைந்து திரியும் நிலை ஏற்படாது; தொடர்ச்சியான யுத்தத்தை மேற்கொள்ள ஏதுவானதுடன், உணவுக்காக எதிரியை நம்பியிருக்கும் நிலைமை

முறையில் ஆய்வு செய்து நாம் எமது இன்றைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக மாற்றி அமைத்தல் பிரதானமானதாகும் இது விடயத்தில் சரியான முறையில் ஆய்வினை மேற்கொள்வதும்; கிராம மட்டத்திலான எமது உணவின் சுய தேவைகளை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்து கொள்வதும் இன்றைய பேரினவாத சிறிலங்கா அரசுக்கு எதிரான யுத்தத்தில் நாம் கையாளும் வடிவங்களில் ஒன்றாகவே அமையும்.

---

# ஈரானிய ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சி

(தெஹ்ரான்)

ஈரானின் ஜனாதிபதி அலி அக்பர் ரவ்சன்யானியை கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

இவர் பயணம் செய்யவிருந்த விமானம் விழுந்து நொருங்கியதால் இந்த முயற்சி அம்பலமானது.

ஈரானில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்வுகளைப் பார்வையிட்டு வருவதற்கு இந்த விமானத்தில் அவர் செல்லவிருந்தார்.

இதனையடுத்து இவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ரவ்சன்யானி முன்னர் ஈரானின் சபாநாயகராக இருந்த போது ஈராக்–ஈரான் யுத்தத்தில் முக்கிய பங்குவகித்திருந்தார்.

## விமானங்கள் மோதல்

(ஒன்ராறியோ)

கனடாவில் நேற்று முன்தினம் இரு விமானங்கள் மோதியதால் அதில் பயணம் செய்த விமானிகள் கொல்லப் பட்டனர்.

இங்கு இடம்பெற்ற வைபவம் ஒன்றின்போது இந்த விமானங்கள் சாகஸ விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்தன.

## சீனா இந்தோனேஷியா உறவு 23 வருடத்தின் பின் புதுப்பிப்பு

(பீக்கிங்)

சீனாவும் இந்தோனேஷியாவும் இருபத்தி மூன்று வருட காலத்தின் பின்னர் ராஜீக உறவுகளை ஏற்படுத்தவுள்ளன.

இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் நேற்று ஆரம்பமாகின. இரு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இதில் கலந்து கொண்டனர்

196‍7 இல் இந்த நாடுகளுக்கு இடையிலான ராஜீக உறவுகள் துண்டிக்கப்பட்டன.

## இந்தியா சமரச முயற்சி

(லண்டன்)

இலங்கையின் இனப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு நட்பு நாடு என்ற முறையில் இந்தியா சமரச முயற்சியினை மேற்கொண்டு உதவ வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான கிட்டு கேட்டுள்ளார் என அகில இந்திய வானொலி அறிவித்தது.

## பல்கலைக்கழக மாணவரும்கைது

(சென்னை)

தமிழ் நாட்டில் கைது செய்யப் பட்டுள்ள இலங்கைத் தமிழரில் அங்கு கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவரும் அடங்குவர்.

இவர்கள் 15 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ஹஜ் யாத்திரிகர்கள் நெரிசலில் மரணம்

(றியாட்)

புனித மெக்கா நகருக்கு சுரங்கப் பாதை வழியாக வந்து கொண்டிருந்த முஸ்லிம் யாத்திரிகர்களில் பலர் சன நெரிசல் காரணமாக இறந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. பலர் காயமடைந்துள்ளனர்.

## தீ விபத்து 16 பேர் மரணம்

(சென்னை)

தமிழ்நாட்டில் உள்ள தென்னார்க்காட்டு உழுந்தூர்ப் பேட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீ விபத்தில் பதினாறு பேர் மாண்டனர். இருபது பேர் காயமுற்றனர்.

இறந்தவர்களில் மூன்று பெண்களும். மூன்று தீயணைப்பு ஊழியர்களும் அடங்குவர். இத் தீ விபத்தினால் அரச ஆஸ்பத்திரியும் சேதமானது.

---

மக்கள் மடல்

## பணிப்பாளர் விளக்கம்

ஆசிரியர்,
ஈழநாதம்.

யாழ். வைத்தியசாலை நிர்வாகத்தினரின் கூற்றாக செஞ்சிலுவைச் சங்கம் பற்றி ஈழநாதம் இதழில் (1.7.90) வெளிவந்த செய்தி சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்கத்தினர் எங்களுக்குப் பலவழிகளிலும் அளப்பரிய சேவை புரிகின்றனர். அவர்களின் மனம் நோகும்படியாக செய்திகளை எம் கூற்றாக வெளியிடாதிருக்கும்வண்ணம் வேண்டுகிறேன்.

பணிப்பாளர்,
யாழ் போதனா
வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

---

முதலாம் தர

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மேற்கு ஜேர்மனியும் இங்கிலாந்தும்

இரண்டாவது இரண்டு கால் இறுதியாட்டங்கள மே. ஜேர்மனிக்கும் இங்கிலாந்திற்கும் வெற்றியைக் கொடுத்துள்ளன. இங்கிலாந்திற்கும் கமரூனுக்கும் இடையிலான போட்டியில் மேலதிக நேரதில் 3-2 என்ற வகையில் இங்கிலாந்து வென்றது. இங்கிலாந்து பெரிதும் பலம் வாய்ந்ததொரு அணியாக இச் சுற்றுப்போட்டியில் பங்கு கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் திடமான லட்சியத்துடன் இவ்வாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் சிறப்பாக இணைந்ததொரு குழுவாக விளையாடினார்கள். அதோடு பயிற்றுனரின் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதொரு அணியும் இதுவாகும் இவையே இங்கிலாந்தை அரை இறுதி ஆட்டத்துக்குக் கொண்டு சென்றவை. கமரூன் இங்கிலாந்தின் நம்பிக்கையைச் சிதறடித்து, 2-2 என்றிருந்த வேளையில் லினேகர் போட்ட கோல் இங்கிலாந்தைக் காப்பாற்றியது எனலாம்.

இன்னொரு ஆட்டத்தில் மே. ஜேர்மனி செக்கோஸ்லோவாக்கியாவை 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது. மே. ஜேர்மனி சிறந்ததொரு அணி என்பதில் சந்தேகமிருக்கவில்லை. ஆனால் செக்கோஸ்லோவாக்கியா மிகச் சிறப்பாக ஆடி கால் இறுதிப் போட்டிக்கு வந்தது. அதே போல சடுமையான போட்டியொன்றை மே. ஜேர்மனிக்கும் கொடுத்தார்கள். இருந்தும் நியாய பூர்வமாகக் கிடைத்த ஒரு பெனால்டியை மே. ஜேர்மனி தலைவர் லூசர் மத்தயாஸ் கோலாக மாற்றியதன் மூலம் மட்டுமே வெற்றியைத்தழுவிக் கொள்ள முடிந்தது. இவ்வாட்டத்தில் மத்தியஸ்தர் பெரும் கண்டனத்துக்குள்ளாகி இருப்பதைக் குறிப்பிட வேண்டும். ஜேர்மனி ரசிகர்களின், வீரர்களின் அழுத்தத்திற்குட்பட்டு செக் அணிக்கு எதிராக சில முடிவுகளை எடுத்து விட்டார் என்ற குற்றச்சாட்டை விமர்சகர்கள்எழுப்புகிறார்கள். அவர்கள் மே. ஜேர்மனியின் வெற்றியை மறுக்கவில்லை. ஆனால் செக் அணியின் தோல்வியை ஏற்கவில்லை. இதுவரை நடைபெற்ற முப்பத்தாறு ஆட்டங்களிலும் மத்தியஸ்தர் கண்டனத்துக்குள்ளாகிய ஒரேயொரு ஆட்டமாக இவ்வாட்டம் திகழ்கிறது.

### வென்றவர்கள் யார்?

எதுஎவ்வாறாயினும் தற்போது அரை இறுதி ஆட்டங்கள் ஆரம்பித்து விட்டன. இத்தாலி ஆர்ஜென்டீனா அணியையும் மே. ஜேர்மனி இங்கிலாந்தையும் எதிர்த்தாடப் போகின்றன இத்தாலி மே ஜேர்மனி இறுதியாட்டம் ஒன்றை அநேகமான பார்வையாளர்கள் எதிர்ப்பு கூறுகிறார்கள் எனினும் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களின் போக்கைக் கருத்திற் கொண்டால் இறுதி ஆட்டத்தின் இறுதி நிமிடம் வரை எதனையும் துணிந்து கூறுவது கடினம்.கால் இறுதி ஆட்டங்களின்முடிவுகளைப் பொறுத்தவரை விமர்சகர்களின் பொது நோக்கை இங்கு குறிப்பிடலாம். இத்தாலி,மே.ஜேர்மனி, ஆர்ஜென்டீனா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் அரை இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன. ஆனால் கால் இறுதி ஆட்டத்தில் பங்கு கொண்ட எந்தவொரு நாடும் தோல்வியடையவில்லை என்பதே அதுவாகும்.

---

## உணவுப் பொருள் விநியோகம்

(விசேடநிருபர்)

முதலாம் திகதி விடுமுறை தினமாக இருந்த போதும் யாழ் மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் சில உணவுப் பொருட்களை விநியோகித்தன.

ஜனசத்தி முத்திரைகளுக்கான உணவுப் பொருட்களைக் குருநகர் பகுதிக்கிளைகள் நேற்று விநியோகித்தன.

கடந்த மாத உணவு முத்திரைகளுக்கான பொருட்கள் இன்னமும் விநியோகிக்கப் படவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டன. (21 )

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இன்று காலை நடைபெறும் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நிகழ்சியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் கோ. மகேந்திரராசா கலந்து கொள்ள உள்ளார்.

# சிறுவர்முதல் வயோதிபர்வரை இனத்தைக்காக்க முன்வரவேண்டும்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைக்கான இறுதிப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் வயோதிபர் முதல் சிறுவர் வரை பங்குபற்றி ஆயுதமேந்திப் போராடவேண்டும்.

துணுக்காய் மூன்றாம் யூனிற் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய விடுதலைப் புலிகளின் வவுனிக்குள பிரதேச பொறுப்பாளர் திரு. இ. நிமால் மேற்கண்டவாறு கூறினார்.

துணுக்காய் பிரதேசவட்ட அவைச் செயலாளர் திரு. பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நிமால் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது இன அழிப்புப் போராட்டம். இந்தப் போராட்டத்தை எதிர்த்து சகலரும் போராட வேண்டும். தமிழினத்தை அழிப்பதற்காகவென்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்போரில் சகலரும் சுத்தை மீட்க முடியும்.

சிங்களப் பிரதேசங்களுக்கு தப்பி ஓடினாலும் அங்குகூட எம்மைத் தப்பவிடமாட்டார்கள். ஆதலால் சாவை எதிர்த்து, இன அழிவை எதிர்த்துப் போராட வேண்டியது சகல தமிழ் மக்களினதும் கடமையாகும்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட எந்தப் பெண் சேர்ந்து போராடுவதன் மூலம்தான் தமிழீழ தாயகத்தையும் மானபங்கப்படுத்தப் படவில்லை. போராட்டத்தில் ஈடுபடாத பெண்களே கூடுதலாக மானபங்கப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆதலால் இளம்பெண்கள் தமது மானத்தைக் காக்கவாவது எம்முடன் இணைந்து போராட முன்வரவேண்டும்.

ஆயுதம் ஏந்திப் போர்க்களத்தில் போராடியவர்களை விட உயிர் தப்பினால்போதும் என்று வீடுகளில் பதுங்கி இருந்தவர்களே கூடுதலாக இறந்துள்ளனர். ஆதலால் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் இறுதிப்போரில் இன அழிப்பு யுத்தத்திற்கு எதிராக சகலரும் பங்குபற்றி, எமது இனத்தையும், மண்ணையும் மீட்க இன்றே போர்க்களம் செல்லத் தயாராகுங்கள் என்றார்.

- நிமால்

# அகதிகள் உற்பத்தியில் ஈடுபடும்வரை ஸ்தாபனங்கள் உதவ வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கி இருக்கும் அகதிகளைக் கொண்டு அவர்களுக்கு வேண்டிய உணவுப்பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும்.

அதுவரை அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை பொது ஸ்தாபனங்கள் வழங்க ஆவன செய்யவேண்டும்.

கிளிநொச்சி குருகுலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி மேற்கண்டவாறு கூறினார்.

கிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட இக் கூட்டம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரச, கூட்டுத்தாபன பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதி திரு. எம். ஜி. சிவபாதம், வடகிழக்கு மாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் திரு விஜயரத்தினம், ரூட் ஸ்தாபன பிரதிநிதி திரு. எம். ஜி. ஆர். உட்பட மற்றும் ஒன்றிய பிரதிதிகளும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தமது தலைமை உரையில் கூறியதாவது:-

வேண்டும். அவர்களின் உடல் உழைப்பைக் கொண்டு நாட்டை வளம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

காந்தி சேவா சங்க அகதி முகாமில் இருக்கும் அகதிகளை சர்வோதயம் பொறுப்பேற்க முன்வந்துள்ளது. நவஜீவனத்தில் தங்கியிருக்கும் திருமலை அகதிகளை நவஜீவனம் பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றது.

ஜெயந்திநகர் குருகுலம், கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலயம், கனகபுரம் கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் அகதிகளை கியூடெக் ஸ்தாபனம் பொறுப்பேற்றுள்ளது. கே. டி. ஆர். ஆர். ஓ. நிறுவனம் மரணிப்பவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உதவ முன்வந்துள்ளது என்றார். (49)

- கோபி

# சீவல் தொழிலாளருக்கு உதவக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தொ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலகம் தாக்குதலுக்குள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் சங்கங்களின் உடனடித் தேவைகளைச் சமாசம் கவனிக்க முடியாத நிலையில் உள்ளதால் தற்போது நிவாரணம் வழங்கிவரும் மனிதநேய ஸ்தாபனங்கள் பாதிப்புக்குள்ளாகிய எமது அங்கத்தவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்வ

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த சில நாட்களாக சீவல் தொழிலைத் தமது ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்க்கை நடாத்தி வரும் 1500 சீவல் தொழிலாளர் இராணுவ நடவடிக்கைகளினால் உடமைகளையும் இழந்து கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

மேலும், வடமாகாணத்தில் பாலாலி, யாழ்ப்பாணம். காரைநகர் ஆகிய இராணுவ

# பிரட்மன் பாலாவை சந்திக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாசாவின்வெளி உறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் இன்று காலை பலாலிக்கு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

திரு. பிரட்மன் வீரக்கோன் ஈரோஸ் இயக்கப் பொதுச் செயலாளர் வே. பாலகுமாரைச் சந்திப்பதற்காகவே இன்று வருவதாகவும் பிரட்மனுடன் ஈரோஸ் எம் பிக்களும் வருகிறார்களென்றும் அறியப்படுகிறது.

# மக்கள் தேவையை நிவிர்த்திக்க ஆலோசனை எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய சூழ் நிலையில் உணவு, எரிபொருள், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய தேவைகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது குறித்து சகல மக்களினதும் ஆலோசனைகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் குறித்து திட்டவட்டமான சரியானதோர் செயல் திட்டத்தை ஏற்படுத்துவதற்கே சகல மக்களது ஆலோசனைகளும் எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

## தம்பலகாம

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சண்டை தொடர்ந்து நடைபெறுவதாகவும், பொம்மர், ஹெலி தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## பலாலியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள இராணுவத்தினரைச் சற்றும் முன்னேறவிடாமல் எதிர்த்தாக்குதலைநடத்தினர் இத்தாக்குதலினால் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். (ம)

## தமிழருக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றி அவதி உற்றுக்கொண்டுள்ளனர் என மேலும் இவ் வறிக்கையில்தமிழீழ பகுதியில் இதுவரை எதுவித பாதிப்பிற்கும் உள்ளாகாத ஏனைய தமிழ் பேசும் மக்களும் கூட கடும்உணவுத்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். இன் நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகவும், உணவு, மருந்து மற்றும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வருவதாகவும் அறிக்கைகளை விடுத்து வரும் ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தைத் தொடங்கிய பின்னர், உணவு, மருந்து எரிபொருட்கள் உட்பட எந்தப் பொருட்களையும் தமிழ் பகுதிக்கு அனுப்பி வைக்காதது

## வைத்தியசாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் மேற்கொள்ளப்பட்டு

## நிவாரணப் பணிக் கூட்டம்

அரச சார்பற்ற நிறுவனங்களின் அகதிகள் நிவாரணப் பணி தொடர்பான கூட்டத் தொடர்வழமைபோல் மாலை 4மணி போலன்றி இன்று புதன்கிழமை 4ஆம் திகதி காலை 10மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் அரசாங்க அதிபரும், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்வார்கள்.

## ஊர்காவற்துறை ஆஸ்பத்திரியும் இயங்குகிறது

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலை மீண்டும்நேற்றுமுன்தினத்தில் இருந்து இயங்கத் தொடங்கியுள்ளது.

கடலில் இருந்து கடற்படையினர் ஊர்காவற்துறையை நோக்கி பீரங்கி, ஷெல் குண்டுகளைஏவிவந்ததினால்மக்கள் அப்பகுதிகளைவிட்டுவெளியேறினர். இதனால் ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலையும் இயங்காமற்கிடந்தது. ஆனால் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளின் முயற்சியினால் தான் அவ் வைத்தியசாலை மீண்டும் கடந்த திங்கள் (2-7-90) இல் இருந்து இயங்கத்தொடங்கியுள்ளது. (ம)

## கோட்டைக்குள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு விடுத்த அறிக்கைமூலம் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் யாழ். கோட்டையில் காயமடைந்த சிங்களப் படையினரை அங்கிருந்து அகற்ற நாம் அனுமதி மறுத்து வருவதாக ஸ்ரீலங்கா அரசு கூறி வருகிறது. கோட்டையில் காயமடைந்தவர்களை அகற்றுவதற்கு நாம் எப்போதுமே ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளோம்.

கடந்த வாரம் இதுபற்றி எம்முடன் பேசிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் நாம் அவர்களை அங்கிருந்து எடுத்துச்சென்று வைத்தியம் செய்வதற்கு மனிதாபிமான அடிப்படையில் அனுமதி அளித்துள்ளோம். படையினருக்கு வைத்தியம் என்னும் பேரில் கோட்டை முகாமிற்கு ஸ்ரீ லங்கா அரசு ஆயுதங்களைக் கொண்டு வருவதைத் தடுக்கும் முகமாகச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் அவர்களைப் பொறுப்பேற்று தரைப்பாதை வழியாகப் பலாலி முகாமிற்கு எடுத்துச் செல்ல நாம் இணங்கினோம். ஆனால் இதுவரை சிங்கள அரசு அதற்குஇணங்கவில்லை சிங்கள அரசிற்குத் தமதுபடையினர்மீதுள்ள அக்கறை எவ்வளவு என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

கோட்டையின் முற்றுகையை உடைக்கிறோம் என்று கூறிக் கொண்டு யாழ். நகரையே சிங்கள அரசு குண்டுவீசி அழித்து வருகிறது. இதேநேரம் சிங்கள அரசின் இனப்படுகொலை பெருமளவில் கிழக்கில் நடைபெற்றுவருவதையும் சர்வதேசமும் அறியும். (ம)

இட மாற்றம்

மகேந்திராஸ் அன். கோ.

# சீவல் தொழிலாளருக்கு உதவக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தொ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலகம் தாக்குதலுக்குள்ளாகி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதனால் சங்கங்களின் உடனடித் தேவைகளைச் சமாசம் கவனிக்க முடியாத நிலையில் உள்ளதால் தற்போது நிவாரணம் வழங்கிவரும் மனிதநேய ஸ்தாபனங்கள் பாதிப்புக்குள்ளாகிய எமது அங்கத்தவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்வகையில்உள்ள தெ.ப.பொ.கூ. சங்கங்கள் மூலம் தொடர்பு கொண்டு உதவி புரியுமாறு சமாசத்தின் சார்பில் அதன் பொதுமுகாமையாளர் இ. சிவநேசன் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த சில நாட்களாக சீவல் தொழிலைத் தமது ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்க்கை நடாத்தி வரும் 1500 சீவல் தொழிலாளர் இராணுவ நடவடிக்கைகளினால் உடமைகளையும் இழந்து கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

மேலும், வடமாகாணத்தில் பாலாலி, யாழ்ப்பாணம். காரைநகர் ஆகிய இராணுவ முகாம்களுக்கு அருகாமையில் உள்ள தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் அங்கத்தவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்துள்ளார்கள் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஐந்து கேட்க . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகத் தீப்பாங் (ஐந்து ரூபா கொடுடா) என்று அந்தச் சாரதியை இராணுவ சிப்பாய் கேட்டாராம். அவர் ஐந்து ரூபா என்றதின் அர்த்தம் 500 ரூபாவாம். அப்பாவி சாரதி அர்த்தம் புரியாமல் 'அட ஐந்து ரூபாதானே' என்று எண்ணி 10 ரூபாவை எடுத்து நீட்டினாராம்.

உடனே கோபாவேசம் கொண்ட அந்தச் சிப்பாய் அந்தச்சாரதியை மீண்டும் அடித்து சட்டையையும் கிழித்து சட்டைப்பையிலிருந்த பணப் பேர்சையும் உருவி எடுத்துக் கொண்டு போக விட்டாராம். (35)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருந்துதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தினமும் இங்கு சிகிச்சை பெற வருகிறார்கள். இவர்களை விட மகப்பேற்றுக்காகவும் பலர் வருகிறார்கள்.

இவர்களை உள்ளகப் பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்க போதிய கட்டில்கள் இல்லாததால், கடும் நோயாளர்கள் பலர் தரையிலேயேபடுக்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ் வைத்தியசாலைக்கு உரிய போதியளவு கட்டில்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருந்தும் இப்பகுதி சூனியப் பிரதேசமாக உள்ளதால் அங்கிருந்து கட்டில்கள் எவற்றையும் வெளியே எடுத்து வர முடியாதிருக்கிறது. (49)

## முதலுதவிப் பயிற்சி

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் ஒழுங்கு செய்துள்ள முதலுதவி பயிற்சி வகுப்பு இன்று காலை 9 00 மணியளவில் ஆரம்பமாகும். இந்த வகுப்பில் இணைந்து கொள்ளும் சகல மாணவர்களையும் குறித்த நேரத்தில் சமுகம் தருமாறு மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் வே. அருணோதயம் கேட்டுள்ளார்.

# தினமும் 25வீத ஆசிரியர்கள் கடமைக்கு வருவதில்லை

(கொழும்பு)

நாட்டில் உள்ள ஆசிரியர்களில் இருபத்தைந்து சதவீதமானோர் தினமும் பாடசாலைகளுக்கு சமுகம் தருவதில்லை என்று கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித்அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

இந்த ஆசிரியர்களின் தினவரவு குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவ்வாறானவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

இது குறித்து அதிபர்கள் கவனம் எடுத்து கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

சில ஆசிரியர்கள் கையொப்பம் வைத்த பின்னர் பாடசாலையில் இருப்பதில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று வருடகாலம் பாடசாலைகளில் பதில் அதிபர்களாக பணிபுரிந்தவர்களை நிரந்தர அதிபர்களாக்கவும் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் சொன்னார்.

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட இக் கூட்டம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் அரச, கூட்டுத்தாபன பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதி திரு.எம். ஜி. சிவபாதம், வட கிழக்கு மாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளர் திரு விஜயரத்தினம்,ரூட் ஸ்தாபன பிரதிநிதி திரு. எம். ஜி. ஆர். உட்பட மற்றும் ஒன்றிய பிரதிதிகளும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.மாணிக்கவாசகர் தமது தலைமை உரையில் கூறியதாவது:-

தற்போது இம்மாவட்டத்தில் மிகக் குறைந்த அளவு உணவுப் பொருட்களே கையிருப்பில் உள்ளன. முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ஒரு வாரத்திற்கான உணவை நாம் வழங்குவோம்.

வெளியே இருந்து உணவுப் பொருட்களை எடுப்பதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளேன். அவைகிடைத்தால்முகாம்களுக்குவெளியே தங்களுடைய உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

தற்போது அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளைப் பொது ஸ்தாபனங்கள் பொறுப்பேற்றுப் பராமரிக்க முன்வந்துள்ளது. நவஜீவனத்தில் தங்கியிருக்கும் திருமலை அகதிகளைநவஜீவனம் பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றது.

ஜெயந்திநகர் குருகுலம், கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலயம், கனகபுரம் கனிஷ்ட மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் அகதிகளை கியூடெக் ஸ்தாபனம் பொறுப்பேற்றுள்ளது. கே. டி. ஆர். ஆர். ஓ. நிறுவனம் மரணிப்பவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் உதவ முன்வந்துள்ளது என்றார். (49)

## பொருட்களை

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

ட்களையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலுள்ள எரிபொருட்களையும் வெளியே எடுத்து பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காகவும் அனுமதி கோரப்பட்டது.

அனுமதி கோரப்பட்ட போது பலாலியுடன் தொடர்புகொண்டு பதிலளிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இது நடந்து ஒரு வாரத்திற்கு மேலாகியும் இதுவரை பதிலளிக்கப்படவில்லை. வேண்டுமென்றே தட்டிக் கழிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். (49)

## வைத்தியசாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த பதுங்கு குழிகளை யாழ்ப்பாண சனசமூக நிலையங்களும் யாழ் பல்கலைக் கழக மாணவர்களும் இணைந்து அமைக்க உள்ளனர். முதலில் மூன்று வாட்டுக்களுக்கு பதுங்கு குழிகள் அமைக்கப்படவுள்ளன எனவும் தெரியவருகிறது. (லோ)

## தமிழ்நாட்டுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சின் உத்தரவின் பேரில் திருச்சி காவல் நிலையங்களில் ஆவணங்களுடன் 600 பேரும் ஆவணமில்லாது 110 பேரும் பதிவுசெய்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களை குடியமர்த்தியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர்கள் 125 பேர் தங்கள் வீட்டில் குடியிருப்போர் பற்றிய தகவல்களை காவல் துறையினருக்கு தெரிவித்தனர்.

இதே வேளை பாரதீய ஜனதா கட்சியின் உபதலைவர் கிருஷ்ணமூர்த்தி இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்விற்காக மத்திய, மாநில அரசுகள் முன்னேற்பாடு நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார்.

## கோட்டையிலிருந்து

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தி பாதுகாப்பு கொடுக்க மேற்படி ஹெலிகொப்டர் கோட்டைக்குள் இறங்கி அங்கு நிலைகொண்டுள்ள படையினருக்கு உணவு, மருந்து வகைகளை வழங்கியதுடன் குறிப்பிட்ட எட்டு படையினரையும் மீட்டு சென்றதாக கூறியுள்ள இலங்கை அரசு, விடுதலைப் புலிகளின் கடுமையான ரொக்கட், மோட்டார் தாக்குதல்களினாலேயே தமது இரண்டாவது முயற்சி தோல்வி அடைந்துவிட்டதாகவும் அறிவித்துள்ளது.

இந்த மீட்பிற்குப் பின்னரும் கோட்டை விடுதலைப் புலிகளின் முற்றுகையிலேயே இருப்பதாகவும் இந்திய வானொலி அறிவித்தது.

வறிக்கையில்தமிழீழ பகுதியில் இதுவரை எதுவித பாதிப்பிற்கும் உள்ளாகாத ஏனைய தமிழ் பேசும் மக்களும் கூட கடும்உணவுத்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர். இன் நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகவும், உணவு, மருந்து மற்றும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வருவதாகவும் அறிக்கைகளை விடுத்து வரும் ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தைத் தொடங்கிய பின்னர், உணவு, மருந்து எரி பொருட்கள் உட்பட எந்தப் பொருட்களையும் தமிழ் பகுதிக்கு அனுப்பி வைக்காதது மட்டுமல்ல தனியார் கூட எந்தப் பொருட்களையும் எடுத்துச் செல்லவிடாமல் தடுத்து வருகிறது.

தாக்குதல்களினாலும், பட்டினியாலும், மருத்துவ வசதி இன்மையாலும் தினம் தினம் செத்து மடிந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை மட்டும் செய்யாதது மட்டுமன்றி, செய்ய விட்டாமல் தடுத்தும் வருகிறது ஸ்ரீலங்கா அரசு.

உலக நாடுகளோ, மனித நல அமைப்புகளோ. சுகாதார நல நிறுவனங்களோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் உதவிகளை சிறிலங்கா அரசு மூலம் வழங்கினால் அந்த உதவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைப்பதில்லை. மக்களைப் பாதிப்பிற்குட்படுத்தி வரும் சக்திகளுக்கே அந்த உதவி போய் சேர்ந்துவிடும்.

காயங்களினாலும், நோயினாலும், பட்டினியாலும் சாவை எதிர்நோக்கியிருக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கு உதவி வழங்கி வரும் நாடுகளோ, அமைப்புகளோ அவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகவே வழங்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம். (ம)

## தங்கம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாயகம் மீட்பு நிதியைத் திரட்டும் வகையில் தொடர்ந்து ஒருமாத காலத்துக்கு மக்களின் பங்களிப்பைக் கேட்டு ஒவ்வொரு பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வருகைதரஉள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்; மக்களை தலைவர்கள் சந்திக்க வரும்பொழுது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேசப் பொறுப்பாளர்கள் சிற்றூர் அவையினர் குறிப்பிடும் இடத்தில் அனைத்து மக்களையும் தவறாது சமுகமளிக்குமாறும் விடுதலைப் புலிகளினால் கேட்கப்பட்டுள்ளது.

நோக்கி பீரங்கி, ஷெல் குண்டுகளைஏவிவந்ததினால்மக்கள் அப்பகுதிகளைவிட்டுவெளியேறினர். இதனால் ஊர்காவற்துறை அரசினர் வைத்தியசாலையும் இயங்காமற்கிடந்தது. ஆனால் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளின் முயற்சியினால் தான் அவ் வைத்தியசாலை மீண்டும் கடந்த திங்கள் (2-7-90) இல் இருந்து இயங்கத்தொடங்கியுள்ளது. (ம)

வளவு என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

கோட்டையின் முற்றுகையை உடைக்கிறோம் என்று கூறிக்கொண்டு யாழ்.நகரையே சிங்கள அரசு குண்டுவீசி அழித்து வருகிறது. இதேநேரம் சிங்கள அரசின் இனப்படுகொலை பெருமளவில் கிழக்கில் நடைபெற்றுவருவதையும் சர்வதேசமும் அறியும். (ம)


# இட மாற்றம்

# மகேந்திராஸ் அன். கோ.

163, ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த எமது வாட்டப் பம் உறுப்புக்கள் தற்பொழுது பிரச்சினை காரணமாக சண்டிலிப்பாய் ராஜாஸ் கூல் முன்பாக மாற்றப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

வில்லியர்ஸ், றொபின், வூசிலி வாட்டர் பம்

விற்பனையாளர்களுக்கு

உரிமையாளர்,
நித்தியானந்தம்
மகேந்திரா அன். கோ,
சண்டிலிப்பாய் மத்தி.

(B 1217)


# மரண அறிவித்தல்

## திரு. பரநிருபசிங்கம் இரட்ணராஜசிங்கம்

சரவணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திருவாளர் பரநிருபசிங்கம் (சிங்கம் ஓவசியர்), பாக்கியத்தின் அன்புப் புதல்வன் இரட்ணராஜசிங்கம் 25.6.90 அன்று அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற இராஜசிங்கம்(Hatton), சிவயோகம் (Bogawanthalawa), சிவராஜசிங்கம், ஜெகதீஸ்வரி, அருள்ராஜசிங்கம் (Umbichy Ltd; Colombo),விஜியராஜசிங்கம்(London), சறோஜினிதேவி (Germany), மணிமேகலை, வரதராஜசிங்கம் (விண்ணன்) (உரிமையாளர், ஈஸ்வர அம்பாள் & Co. ஸ்ரான்லி வீதி, யாழ்.), ஈஸ்வரபகவான் & கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), தர்மகுலராஜசிங்கம் (London) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சறோஜினிதேவி (Hatton), V. E. A. கனகசிவம் (Bogawanthalawa), மகேஸ்வரி, அமிர்தலிங்கம் (Nationl Housing Development Authority - Jaffna), வாசுகி (Colombo), ஜெகசிவாமணி (London), லோகேஸ்வரன் (Germany) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். இவ் அறிவித்தலை உரியநேரத்தில் அறிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

தகவல்!

சரவணை மேற்கு,
வேலணை.

திருமதி. பரநிருபசிங்கம்
பாக்கியம்

(R/394)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 -ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 04 ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.